



# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351





சனி ❖ ஏப்ரல். 15, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 190 ❖ ரூ.10

### அதிகார பசி கொண்டவர்கள் நாட்டிற்கு அதிக தீங்கிழைத்துவிட்டார்கள்

# சுயநலம்

## வடகிழக்கு மக்கள் முன்னேறி வந்து தங்களின் வளர்ச்சிக்கான பெயரைத் தாங்களே எடுத்துக்கொள்கின்றனர் : பிரதமர் மோடி

கவுகாத்தி, ஏப். 15-

**அதிகார பசி கொண்டவர்கள் நாட்டிற்கு அதிக தீங்கிழைத்துவிட்டார்கள் என்றும், அவர்களின் ஒரே நோக்கம் நாட்டை ஆள்வது மட்டும்தான் என்றும் எதிர்கட்சிகளை பிரதமர் மோடி குற்றம் சாட்டியுள்ளார்.**



அஸ்ஸாம் மாநிலம் கவுகாத்தியில் நடந்த வரலாற்று சிறப்பு மிக்க பிஹூபிர் கொண்டாட்டத்திற்கு முன்னதாக, பொதுக்கூட்ட நிகழ்வில் பிரதமர் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: "கடந்த 9 ஆண்டுகளாக நான் வடகிழக்கின் வளர்ச்சியைப் பற்றி பேசும்போதெல்லாம் சிலர் மிகவும் கலவரமடைகின்றனர். ஏனென்றால் இந்த மாநிலங்கள் அவர்களால் தான் வளர்ச்சி அடைந்தது என்று கூறமுடியாது. கடந்த பல சகாப்தங்களாக அவர்களும் நாட்டை ஆண்டதாக கூறிக்கொள்கிறார்கள். அதிகார வேட்கை உள்ளவர்கள் நாட்டை ஆள்வதை மட்டுமே நோக்கமாக கொண்டு மக்களுக்கு பெறும் தீங்குகளை செய்துவிட்டார்கள்.

நாங்கள் உங்களின் பணியாளர்கள் என்ற உணர்வுடன் பணியாற்றி வருகிறோம். அதனால் தான் வடகிழக்கு மாநிலங்கள் எங்களுக்கு வெகு தூரமாக தெரியவில்லை. நாம் எங்கே இருந்தாலும் அனைவரும் சொந்தம் என்ற உணர்வு நிலைத்திருக்கும். இன்று வடகிழக்கு மக்கள் முன்னேறி வந்துதங்களின்வளர்ச்சிக்கான பெயரைத் தாங்களே எடுத்துக்கொள்கின்றனர். வளர்ச்சி என்ற மந்திரத்தின் மூலம் அவர்கள் முன்னேறி வருகிறார்கள்.

வடகிழக்கு இன்று தனது முதல் எய்ம்ஸ் மருத்துவமனையையும், அஸ்ஸாம் மாநிலம் மூன்று மருத்துவக் கல்லூரிகளையும் பெற்றிருக்கிறது. கடந்த 9 ஆண்டுகளில் நாங்கள் உள்கட்டமைப்பு திட்டங்களில் கவனம் செலுத்தியுள்ளோம். அதனால்தான் இங்கிருப்பவர்கள் நகரங்களை இணைக்கும் உள்கட்டமைப்பு திட்டங்கள் குறித்து பேசுகிறார்கள்.

குறிப்பிட்ட வாக்கு வங்கிகளை உருவக்குவாதற்காக செயல்படாமல் நாட்டு மக்களின் சிரமங்களை குறைப்பதில் நாங்கள் கவனம் செலுத்தினோம். சிகிச்சைக்காக எங்களின் சகோதரிகள் நீண்ட தூரம் செல்லக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். பணம் இல்லை என்பதற்காக ஏழைகள் யாரும் தங்களின் சிகிச்சைகளை தள்ளிப்போடக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம்.

முந்தைய அரசாங்கத்தின் கொள்கைகளால் நம்மிடம் குறைவான மருத்துவர்களே இருந்தார்கள். இதனால் நாட்டில் அனைவருக்கும் சிறந்த சுகாகதாரச் சேவையை அளிப்பதில் பெரிய தடை இருந்தது. 2014க்கு முந்தைய 10 ஆண்டுகளில் நாட்டில் 150 மருத்துவக் கல்லூரிகளே இருந்தன. கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் நமது அரசாங்கத்தால் 300 மருத்துவக் கல்லூரிகள் புதிதாக கட்டப்பட்டுள்ளன. அதேபோல், மருத்துவப் படிப்புகளுக்கான இருக்கைகளும் 1 லட்சம் வரை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளன.

சிகிச்சைக்காக பணம் இல்லாமல் இருப்பது ஏழைகளுக்கு எவ்வளவு பெரிய துயரம் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். அதனால்தான் நாங்கள் ஆயுஷ்மான் பாரத் யோஜனா திட்டத்தை உண்டாக்கினோம். விலையுயர்ந்த மருந்துகளை வாங்குவது ஏழைகளுக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும் எவ்வளவு கவலைக்குரிய விஷயம் என்பதை நான் அறிவேன். அதனால் தான் நமது அரசாங்கம், குறைந்த விலையில் மருந்துக்களை பெறுவதற்காக 9,000 ஜன் அவுஷாதி கேந்திராக்களை உண்டாக்கி இருக்கிறது". இவ்வாறு பிரதமர் பேசினார்.

அஸ்ஸாமியர்களின் புத்தாண்டை அறிவிக்கும் ரோகலி பிஹூ அல்லது போஹ் பிஹூ பல்வேறு சமூகமக்களால் கொண்டாடப்படுகிறது. அஸ்ஸாமியர்கள் ஆண்டுக்கு மூன்று முறை பிஹூ பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். விவசாயத்தின் தனித்துவமான சுழற்சியை குறிக்கும் இந்த பண்டிகை, ஜனவரியில், போகலி அல்லது மஹ் பிஹூ, ஏப்ரலில் போக் அல்லது ரோகலி பிஹூ, அக்டோபரில் கோங்கலி பிஹூ எனகொண்டாடப்படுகிறது.









# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

" உனது வாழ்க்கைக்கு
ஒரு எல்லை அமைத்து வாழ்
ஆனால் எல்லைக்குள் ஒருபோதும்
வாழ்க்கையை அமைத்து விடாதே "




# மதுரை மீனாட்சி அம்மன் கோவில் பட்டு சேலைகள் ரூ.5 கோடிக்கு விற்பனைசெய்துள்ளதாக அரசு தகவல்

மதுரை , ஏப்.15–

மதுரை மீனாட்சி அம்மன் பட்டு சேலைகள் ரூ.5 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது.

பிரம்மாண்ட கட்டிடக் கலையும், பழமையும் பெற்ற உலக பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு ஆண்டு முழுவதும் லட்சக் கணக்கான பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். மதுரை மீனாட்சி அம்மனுக்கும் சுந்தரேஸ்வரருக்கும் தினமும் பொதுமக்கள் சார்பாகவும் கோவில் நிர்வாகம் சார்பாகவும் பட்டு சேலைகள், வேஷ்டிகள், துண்டுகள் சாற்றப்படுகின்றன.

இவ்வாறு சாற்றப்படும் வேட்டி, சேலை, துண்டுகள், நிர்வாகத்தின் சார்பில் வாரம் ஒரு முறை கோவில் வளாகத்தில் வைத்து ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் மதுரை மீனாட்சிஅம்மன் கோவிலுக்கு பட்டு சேலைகள் விற்பனை மூலம் கிடைத்துள்ள விவரம் குறித்து மதுரையை சேர்ந்த மருதுபாண்டி என்பவர் கேட்ட கேள்விக்கு கோவில் நிர்வாகம் தகவல் வழங்கியிருக்கிறது.

கடந்த 2020 முதல் 2022ம் ஆண்டு வரை சுமார் மூன்று ஆண்டுகளில் மட்டும் ரூ.5 கோடியே 45 லட்சத்து 64 ஆயிரத்து 586–க்கு விற்பனை நடந்துள்ளதாகவும், இதன் மூலம் கிடைத்த வருமானம் கோவிலின் வங்கி கணக்கில் இருப்பு வைக்கப்படும் என கோவில் நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது. 2020 – 2022ம் ஆண்டு காலக்கட்டத்தில் கரோனா தொற்று பரவியதால் கோவிலுக்கு பக்தர்கள் வருகை குறைந்தது.

சித்திரைத் திருவிழா 2 ஆண்டுகள் தடைப்பட்டது. தற்போது சித்திரைத் திருவிழா முதல் அன்றாட திருவிழாக்கள் மீனாட்சியம்மன் கோயிலில் களைக் கட்டியுள்ளது. தினமும் பக்தர்கள் வருகையும் தற்போது கூடியுள்ளது. கோவிலில் திருமணங்களும் அதிகரித்துள்ளன. அதனால், இனி வரும் காலக் கட்டத்தில் மீனாட்சியம்மன் கோவில் பட்டு சேலைகள், வேஷ்டிகள், துண்டுகள் இன்னும் கூடுதல் தொகைக்கு ஏலம் போகும் வாய்ப்புள்ளது.

# தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா



தென்காசி,ஏப்.15–

தென்காசியை அடுத்த நன்னகரத்தில் அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது முழு உருவச்சிலைக்கு தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, பொதுக்குழு உறுப்பினர்கள் சாமிதுரை, ரஹீம், தமிழ்ச்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம், அன்பழகன், ஜெயக்குமார், நகரச் செயலாளர் வெங்கடேசன், ஒன்றிய செயலாளர் திவ்யா மணிகண்டன், பேரூராட்சி மன்றத் தலைவர்கள் வேணி வீரபாண்டி, சின்னத்தாய், சங்கீதா, பேரூர் செயலாளர்கள் சுடலை, முத்தையா, பண்டாரம், மாவட்ட அணி அமைப்பாளர்கள் வேலுச்சாமி, முத்துராமலிங்கம், கோமதிநாயகம், தங்கராஜ் பாண்டியன், சமீம் இப்ராஹிம், மாவட்ட அணிதுணை அமைப்பாளர்கள் ஜீவானந்தம், சுரேஷ், பி.எஸ்.மாரியப்பன், வழக்கறிஞர்கள் முத்துக்குமாரசாமி, ராஜா, செல்லத்துரை, சண்முகநாதன், நசீர், உக்காசிம் துரை, கருப்பண்ணன், முத்துவேல், தில்லை நடராஜன், காளிராஜ், ராமராஜ், பரமசிவன், மாரியப்பன், வீரபாண்டியன், அண்ணாதுரை, சிவக்குமார், அல்லாபிச்சை, அருணா பாண்டியன், ஆனந்த், ஆனந்தராஜ், குத்தாலிங்கம், செல்லத்துரை, சுரேஷ், முத்துப்பாண்டியன், கல்யாணசுந்தரம், பாலசுப்பிரமணியன், குத்தாலிங்கம், சிங்கத்துரை, குருசாமி , பாலு, சந்திரன், பூபதி, சலீம், பாலு, பகவதிராஜ், தர்மராஜ், மாரி, காசிகிருஷ்ணன், ராமர், சுந்தர்ராஜ், மோகன்ராஜ், டேவிட் முருகன், யாசர் அரபாத், பூல் பாண்டியன் உட்பட பலர் பங்கேற்றனர்.

இதை தொடர்ந்து தென்காசி தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்திலும் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதன் தலைமையில் அம்பேத்கரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இதிலும் அனைத்து நிர்வாகிகள் பங்கேற்றனர்.






தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சிக்கு உட்பட்ட 1-வது வார்டு பிஜேபி நகர்மன்ற உறுப்பினர் ரேவதி பாலீஸ்வரன், தென்காசி அதிமுக வடக்கு மாவட்ட செயலாளரும், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான கிருஷ்ண முரளி குட்டியப்பா சட்டமன்ற அலுவலகத்தில் வைத்து குமந்தாபுரம் அனைத்து சமுதாய மக்களும் பயன் பெரும் வகையில் சமுதாய நலக்கூடம் அமைத்து தர வேண்டியும் மேலும் இப்பகுதியில்5000–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர், இப்பகுதியில் சுப நிகழ்ச்சி மற்றும் பொது நிகழ்ச்சி நடத்துவதற்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தால் பொதுமக்களின் நலன் கருதி குமந்தாபுரத்தில் சமுதாய நலக்கூடம் அமைத்து தருமாறு கோரிக்கையை முன் வைத்தார்.

# கடையநல்லூரில் அண்ணல் அம்பேத்காரின் 133– வது பிறந்த நாள் விழா



தென்காசி, ஏப்.15–

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக அலுவலகத்தில் அண்ணல் அம்பேத்கார் 133- வது பிறந்த நாளையொட்டி கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண முரளி குட்டியப்பா தலைமையில் அம்பேத்கரின் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் வி.பி மூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் பொய்கைமாரியப்பன், எம்.கே.முருகன் நகர செயலாளர் கடையநல்லூர், செல்லப்பன், கிட்டுராஜா, அழகர்சாமி, ஆறுமுகம், சண்முகசுந்தரம், கார்த்திக், நல்லமுத்து, கருப்பையா தாஸ், ராஜேந்திர பிரசாத், மாரியப்பன், எஸ்எம்மைதீன், கோபிநாத், சிங்காரவேலன், சத்தியகலா தீபக், புகழேந்தி, எம்.எம். ஹனிபா, பால்பாண்டி, செங்கல்முடையார், முத்துக்குட்டி, அசோக், கிருஷ்ணன், ஷாகிர்உசேன், நாகூர் மீரான், பெருமாள், கோவிந்தராஜ் உட்பட மாவட்ட, நகர, கிளைக் அதிமுக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# அம்பேத்கர் 133–வது பிறந்த நாள் விழா திமுக சார்பில் அன்னதானம்



கள்ளக்குறிச்சி, ஏப்,15_

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு திமுக சார்பில் அவருடைய உருவப்படத்திற்கு மாலை அணிவித்து பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அம்பேத்கர் பிறந்தநாளை கொண்டாடும் விதமாக கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது, இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது நகர்மன்றத் தலைவர் திருநாவுக்கரசு, துணைத் தலைவர் வைத்தியநாதன், நகரச் செயலாளர் டேனியல்ராஜ் மற்றும் திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானொர் கலந்து கொண்டனர்.

## அரியலூரில் அம்பேத்கர் பிறந்தநாளையொட்டி

# அனைத்து கட்சியினரும் அவரது உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



அரியலூர்,ஏப்.15–

அரியலூரில் டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா, பல்வேறு அரசியல் கட்சிகள் சார்பில் கொண்டாடப்பட்டது,

சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் 132 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, அதிமுக அரியலூர் மாவட்ட செயலாளரும், முன்னாள் அரசு தலைமை கொரடாவுமான தாமரை எஸ். ராஜேந்திரன் தலைமையில், கட்சி நிர்வாகிகள் பாஸ்கர், சங்கர், ஜீவா அரங்கநாதன், பழனியாண்டி, முன்னாள் நகராட்சி கவுன்சிலர் சிவஞானம் உள்ளிட்டோர், அரியலூரில் உள்ள அம்பேத்கர் உருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

திமுக அரியலூர் நகர செயலாளர் இரா. முருகேசன் தலைமையில், கட்சி நிர்வாகிகள் மணக்குடி பாலு, அருண் கலைவாணன், முன்னாள் நகராட்சி கவுன்சிலர் ராஜேந்திரன், உள்ளிட்ட பலர், அரியலூரில் உள்ள டாக்டர் அம்பேத்கர் உருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் சின்னதுரை தலைமையில், நகரச் செயலாளர் விஜயகுமார், தொழிற்சங்க நிர்வாகி மணக்குடி கோவிந்தன், சக்திவேல் உள்ளிட்ட பலரும், அரியலூரில் உள்ள டாக்டர் அம்பேத்கர் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில், கட்சியின் நகர செயலாளர் வக்கீல் கமலக்கண்ணன் தலைமையில், கட்சி ஒன்றிய செயலாளர் பருக்கல் புகழேந்தி, ஊராட்சி மன்ற தலைவர் பழனிவேல், நகர பொருளாளர் மதியழகன், வார்டு செயலாளர்கள் அருண், ராஜேந்திரன், சின்னத்தம்பி, மணிகண்டன், ஹரிஹரன், உள்ளிட்டோர் அம்பேத்கர் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

காங்கிரஸ் கட்சி சார்பில், அதன் அரியலூர் மாவட்ட தலைவர் சங்கர் தலைமையில், மாவட்ட எஸ்சி எஸ்டி பிரிவு தலைவர் ஏ பி சுரேஷ், நகர தலைவர் மாமு சிவக்குமார் உள்ளிட்டோர், அம்பேத்கர் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

விஜய் மக்கள் இயக்கம் சார்பில், அதன் அரியலூர் மாவட்ட தலைவர் சிவா தலைமையில், சேகர், ஒன்றிய நிர்வாகிகள் பாலகுரு, ராமச்சந்திரன், ஜான்சன், தமிழரசன், பாலமுருகன், அபி உள்ளிட்டோர் அம்பேத்கர் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அரியலூர் பள்ளிக்கல்வித்துறை நிர்வாக அலுவலர் சங்கம் சார்பில், அதன் மாநில பொதுச் செயலாளர் துரை சரவணன் தலைமையில், சங்க நிர்வாகிகள் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அரசு ஊழியர்கள் ஐக்கிய பேரவை சார்பில், அரியலூர் மாவட்ட தலைவர் மணிவேலன் தலைமையில், செயலாளர் தமிழ்மணி, பரஞ்சோதி, உத்தாண்டம், பாஸ்கர் உள்ளிட்டோர் அம்பேத்கர் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். ஏஐடியூசி சார்பில் தண்டபாணி தலைமையில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சிமாவட்டசெயலாளர் இளங்கோவன் தலைமையில், கட்சி நிர்வாகிகள் துரைசாமி, சிற்றம்பலம், கிருஷ்ணன், அருணன் உள்ளிட்டோர், அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் இப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது



தென்காசி, ஏப்.15–

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் சிராஜுல் மில்லத் அறக்கட்டளை சார்பில் இப்தார் நிகழ்ச்சி இக்பால்நகர் ஹிதாயத்துல் இஸ்லாம் துவக்க பள்ளியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் இப்தார் நோன்பின் சிறப்பையும் இஸ்லாம் மக்களின் சிறப்புக்களைபற்றியும் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்டத் தலைவர் செய்யது சுலைமான், பொருளாளர் இபுறாகீம், வி.எம்.ஜபருல்லாகான், முகமது கோயா, ஹாஜா மைதீன், ரஹ்மத்துல்லா, இந்தியூசுப், அப்துல் காதர், சுல்தான், முஹம்மது ஷா, செய்யது மசூது, இஸ்மத், நயினார் முஹம்மது, கடையநல்லூர் நகர்மன்ற உறுப்பினர் சேயன் இபுறாகீம், இஸ்மாயில், சேகுதுமான் மற்றும் ஏராளமான பொதுமக்கள் இப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மதுரை மாவட்டம் தெற்கு வட்டம், சிலைமான் கிராமம் கே.கே நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வழிவிடும் விநாயகர், ஸ்ரீ பள்ளத்து மாரியம்மன் திருக்கோவிலில் 23ஆம் ஆண்டு உற்சவ விழாவை முன்னிட்டு முதல் நாள் ஆற்றல் கரகம் எடுத்தல், இரண்டாவது நாள் அக்னி சட்டி எடுத்தல், முளைப்பாரி ஊர்வலம், மூன்றாவது நாள் அன்னதானம், விளக்கு பூஜை நடைபெற்றது. அன்னதானம், சிலைமான் கே.கே நகர் கிராம பொது மக்களால் சிறப்பாக நடைபெற்றது.

# இன்னுயிர் நீர்த்த 66 தீயணைப்பு வீரர்களுக்கு நினைவு அஞ்சலி



கள்ளக்குறிச்சி, ஏப்,15_

கடந்த 1944 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் தேதி மும்பை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் இருந்த வெடி பொருட்கள் வெடித்து சிதறிய பெரும் தீ விபத்தை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மும்பை தீயணைப்புத் துறையை சார்ந்த 66 தீயணைப்பு வீரர்கள் பலியானார்கள் அவர்களின் நினைவாக நேற்று இன்னுயிர் நீர்த்த வீரர்களுக்கு இந்தியா முழுவதும் உள்ள தீயணைப்புத் துறையினர் நினைவு அஞ்சலி செலுத்தினர், அதன் ஒரு பகுதியாக, கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தீயணைப்பு நிலையத்தில், நிலைய அலுவலர் பொறுப்பு சக்திவேல் தலைமையில், நிலைய வீரர்கள் இன்னுயிர் நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மலர் வளையம் வைத்து நினைவஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் நேற்று முதல் 20-ம் தேதி வரை தீ தொண்டு வாரமாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர், அதன்படி உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் தீ விபத்தினை தவிர்க்கும் வழிமுறைகள் மற்றும் தீ விபத்து ஏற்பட்டால் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களுக்கும் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## அரசு போக்குவரத்து பணிமனையில்

# அம்பேத்கர் போக்குவரத்து தொழிலாளர் விடுதலை முன்னணி சார்பாக உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை



சீர்காழி, ஏப். 15 -

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி கிளை அரசு போக்குவரத்து கழகத்தில் அறிவர் அம்பேத்கர் போக்குவரத்து தொழிலாளர் விடுதலை முன்னணி சாமிநாதன் தலைமையில் டாக்டர் அம்பேத்கர் 132 வது பிறந்தநாள் முன்னிட்டு திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் இளந்தமிழன், காமராஜ், சுதாகர், முருகன், மாரிமுத்து, செல்வழகன், செல்வம், ஆற்காடு ரமேஷ், உள்ளிட்ட அறிவர் அம்பேத்கர் போக்குவரத்து தொழிலாளர் விடுதலை முன்னணி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# திருத்தணி முருகன் கோவிலில் ரூ.1¾ கோடி உண்டியல் வசூல் 964 கிராம் தங்கம் பக்தர்கள் காணிக்கை



திருத்தணி:ஏப்,15

திருத்தணி முருகன் கோவில் அறுபடை வீடுகளில் ஐந்தாம் படை வீடாக திகழுகிறது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்கிறார்கள். இதே போல் கிருத்திகை நாட்களில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்ற குவிவது வழக்கம்.

இந்நிலையில் திருத்தணி முருகன் கோவிலில் உள்ள உண்டியல் காணிக்கை பணம் எண்ணும் பணி நடைபெற்றது. மலைக் கோவிலில் உள்ள தேவர் மண்டபத்தில் கோயில் ஊழியர்கள் இதில் ஈடுபட்டனர்.கடந்த 44 நாட்களில் ரூ.1 கோடியே 73 லட்சத்து 71 ஆயிரத்து 106 உண்டியல் பணம் காணிக்கையாககிடைத்து இருந்தது.

ராஜ கோபுரம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதால் அங்கு வைக்கப்பட்டிருந்த திருப்பணி உண்டியலில் ரூ.15 லட்சத்து 21 ஆயிரத்து 194 இருந்தது. மொத்தம் ரூ. 1 கோடியே 88 லட்சத்து 92 ஆயிரத்து 300 ரொக்க பணமும், 964 கிராம் தங்கம், 14 ஆயிரத்து 131 கிராம் வெள்ளியும் உண்டியல் காணிக்கையாககிடைத்து இருப்பதாக திருத்தணி கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்து உள்ளனர்.

# கும்மிடிப்பூண்டியில் நியூ மணி டெக்ஸ்டைல் திறப்பு விழா





▶ நியூ மணி டெக்ஸ்டைல் ஹைஃபேஷன் ரெடிமேட்ஸ் நிறுவனம் தனது 2வது கிளையை தமிழ் புத்தாண்டு தினத்தில் கும்மிடிப்பூண்டியில் மிகவும் பிரம்மாண்டமாகவும் கோலாகலமாகவும் தொடங்கி உள்ளது. புதிய கடை திறப்பு விழாவில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்ரமராஜா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். நியூ மணி டெக்ஸ்டைல் நிறுவனத்தின் உரிமையாளர் டேவிட்ராஜ் திறப்பு விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார் சிறப்பித்தார். ஆரோக்கியராஜ் திறப்பு விழாவில் கலந்து கொண்டு மேலும் விழாவை சிறப்பித்தார்.





▶ காரைக்கால் மாவட்டம் திருப்பட்டினத்தை அடுத்த கீழையூரில் மழை மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது இக்கோயிலில் ஆண்டுதோறும் தமிழ் புத்தாண்டான சித்திரை மாத முதல் நாளில் மழை மாரியம்மனுக்கு மகா அபிஷேகம் மற்றும் மகா தீபாராதனை நடைபெறுவது வழக்கம். இந்தாண்டு சித்திரை முதல் நாளை முன்னிட்டு மழை மாரியம்மன் மற்றும் விநாயகர் முருகன் காளியம்மன் உள்ளிட்ட சுவாமிகளுக்கு மஞ்சள் பால் தயிர் சந்தனம் பன்னீர் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் மகா அபிஷேகம் நடைபெற்று மழை மாரியம்மன் வெள்ளியங்கி கவசத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார் அதனைத் தொடர்ந்து சுவாமிகளுக்கு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது இதில் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான மக்கள் கலந்து கொண்டு அம்மனுக்கு மாவிளக்கு போட்டு வழிபட்டனர்

# அரியலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் பேரணி



அரியலூர்,ஏப்.15-

அரியலூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் பேரணி நடைபெற்றது, சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் 132 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, அரியலூர் காமராஜர் திடலில் தொடங்கி கடைவீதிகள் வழியாக பேருந்து நிலையம் செட்டிஏரிக் கரையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சிலை வரை பிரதமர் நரேந்திர மோடியையும் சனாதன தர்மத்தையும் எதிர்த்து விடுதலை சிறுத்தைகள் கட்சி நடத்திய எழுச்சிப் பேரணி நடைபெற்றது

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் அரியலூர் மாவட்டச் செயலாளர் செல்வநம்பி தலைமையில் நடைபெற்ற இந்த எழுச்சி பேரணியில், கட்சியின் மாநில அமைப்பு செயலாளர் திருமாறன், செய்தி தொடர்பாளர் சுதாகர், கட்சி நிர்வாகிகள் அன்பானந்தம், பெரியாக்குறிச்சி பாலசிங்கம், தனக்கோடி, மருதவாணன், இலக்கிய தாசன், கருப்புசாமி, வெற்றி, கதிர் வளவன், சிவா, தமிழ் ரவி, செந்துறை கடம்பன், செந்துறை ராஜேந்திரன், திருக்களப்பூர் ராசா பிள்ளை, ராயம்புரம் செந்தில்குமார், காட்டாத்தூர் வீர செல்வன், ஆண்டிமடம் வேல்முருகன், ஜெயங்கொண்டம் பாரதி மற்றும் ஏராளமான பெண்கள் உட்பட, ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.



▶ புதுவை மாநிலம் காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பாக டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள் விழா நேற்று காலை கொண்டாடப்பட்டது.. மாவட்ட ஆட்சியரகம் எதிரே அமைந்துள்ள அம்பேத்கார் திருவுருவச் சிலைக்கு திருநள்ளார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் சிவா மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் ஆகியோர் கலந்துகொண்டு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். மேலும் இந்நிகழ்வில் காவல் கண்காணிப்பாளர்கள் வடக்கு (மற்றும்) தெற்கு ஆதிதிராவிடர் நலத்துறை உதவி இயக்குனர் மதன்குமார் செய்தி மற்றும் விளம்பரத்துறை உதவி இயக்குனர் (பொ.) குலசேகரன் மற்றும் அரசு அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



▶ டபிள்யூ பி எப்.சார்பில் அதன் தலைவர் ஆதினி வெட்சேஸ் பிரைவேட் லிமிடெட் நிருவனர், திரைபட நடிகர் ஜெய்ராஜ்குமார் அம்பேத்கார் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்.உடன் வாசன் அன் கோ உரிமையாளர் சீனிவாசன், மாநகராட்சி பள்ளி ஆசிரியர் இசைவானன், பென்சில்ராவ், மாநகராட்சி தூய்மை ஆய்வாளர் பிரகாஷ், எம்.சீனிவாசன், ஜெயசீலன், மற்றும் நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர்.



▶ காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு நேற்று காரைக்காலில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ அம்மையார் ஆலயத்தில் சாமி தரிசனம் செய்தார். உடன் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் உள்ளனர்.

### உளுந்தூர்பேட்டை அருகே இருசக்கர வாகன விபத்தில்

# தஞ்சாவூர் பகுதியை சேர்ந்த கல்லூரி மாணவர்கள் 2 பேர் பலி





கள்ளக்குறிச்சி, ஏப்,15_

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே சென்னையிலிருந்து இருசக்கர வாகனத்தில் கல்லூரி மாணவர்கள் இரண்டு பேர் தஞ்சாவூருக்கு சென்று கொண்டிருந்த பொழுது உளுந்தூர்பேட்டை புறவழிச் சாலையில் அதே திசையில் எதிரே சென்று கொண்டிருந்த கனரக லாரியின் மீது மோதிய விபத்தில் ஒரு மாணவர் லாரியின் சக்கரத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே பலியானார், மற்றொரு மாணவர் பலத்த அடிபட்டு இருந்த நிலையில் ஆம்புலன்ஸ் மூலம் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டது, அங்கு சிகிச்சை பலனின்றி மற்றொரு மாணவரும் உயிரிழந்தார்.

இத்தகவல் அறிந்த உளுந்தூர்பேட்டை காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்ட பொழுது விசாரணையில் மாணவர்கள் தஞ்சாவூர் பகுதியை சேர்ந்த மாலிக் மகன் அஸ்வாக் (20) மற்றும் அப்துல் காதர் மகன் முகமது பகீம் (20) ஆகிய இருவரும் சென்னையில் உள்ள கல்லூரியில் பயின்று வந்ததாகவும், விடுமுறைக்காக சொந்த ஊருக்கு இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும் தெரிய வந்தது, மேலும் இவ்விபத்து குறித்து காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு பூம்புகார் எம்எல்ஏ நிவேதா எம்.முருகன் மாலை அணிவித்து மரியாதை





பூம்புகார், ஏப். 15 -

தமிழகம் முழுவதும் சட்ட மாமேதை அம்பேத்கரின் 133 வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. அதன் ஒருபகுதியாக மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி அருகே மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதைத் தொடர்ந்து தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட திமுக துணை செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றிய செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், அமுர்த.விஜயகுமார், எம். அப்துல்மாலிக், தரங்கை பேரூர் திமுக செயலாளர் முத்துராஜா மற்றும் திமுக கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அம்பேத்கர் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# அரசியலுக்காக அண்ணாமலை குற்றம் சாட்டுகிறார் அமைச்சர் துரைமுருகன்



வேலூர் , ஏப். 15 -

திமுகவினரின் சொத்துப் பட்டியலை பாஜக மாநில தலைவர் அண்ணாமலை அரசியலுக்காக வெளியிட்டுள்ளார் என்றும், இதுபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

அண்ணல் அம்பேத்கரின் 133வது பிறந்த நாளையொட்டி வேலூர் மக்கான் பகுதியில் உள்ள டாக்டர் அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பிறகு செய்தியாளர்களிடம் பேசிய துரைமுருகன்,"காவிரி-குண்டாறு இணைப்பு திட்டத்தை கடந்த ஆட்சியாளர்கள் முறையாக செயல்படுத்தவில்லை. தற்போதைய திமுக தலைமையிலான தமிழக அரசுதான் காவிரி - குண்டாறு இணைப்பு திட்டத்திற்காக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக வெளிநாட்டில் இருந்து நிதி பெற்று இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறோம். இந்த திட்டத்தின் கீழ் காவிரி தெற்கு வெள்ளாறு வழியாக குண்டாற்றை இணைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதன் அடிப்படையில் காவிரி - குண்டாறு இணைப்பு திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும்.

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை திமுக பெருந்தலைவர்களின் சொத்துப்பட்டியலை வெளியிட்டுள்ளார் என்பது குறித்து செய்தியாளர்கள் அமைச்சர் துரைமுருகனிடம் கேள்வி எழுப்பியபோது, "அதெல்லாம் எனக்குத் தெரியாது. அரசியல் காரணத்துக்காக அவர் இதையெல்லாம் செய்கிறார்" என்றார்.

### தமிழ் புத்தாண்டை முன்னிட்டு

# சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி வைர அங்கி அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்





திருவள்ளூர், ஏப். 15 -

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நேற்று தமிழ் புத்தாண்டு மற்றும் அரசு விடுமுறை நாள் என்பதால் தர்ம தரிசனம், சிறப்பு தரிசனங்கள் உள்ளிட்ட வரிசைகளில் ஏராளமான பக்தர்கள் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

நேற்று காலை மூலவருக்கு பால், தயிர், பன்னீர், இளநீர், தேன் உள்ளிட்டவைகளால் அபிஷேகங்கள் செய்து மகா அலங்காரம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது. இதன் பின்னர், மூலவருக்கு சந்தன காப்பு அலங்காரமும், அதைத்தொடர்ந்து வைர அங்கி அலங்காரத்துடன் மூலவர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

உற்சவர் பாலசுப்ரமணி, வள்ளி, தெய்வானையுடன் மயில் வாகனத்தில் பிரகாரப் புறப்பாடு நடைபெற்றது. இதன் பின்னர், மரகத விநாயகர் சன்னதி அருகே பஞ்சாங்கம் வாசிக்கும் நிகழ்ச்சி கோவிலின் தலைமை குருக்கள் ஆனந்தன் தலைமையில் கோயிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் ஜான்சி ராணி ராஜா, ஒன்றிய கவுன்சிலர் சந்துரு உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



▶ தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி ஸ்ரீ நாடியம்மன் திருக்கோயில் குத்து விளக்கு பூஜை நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் டாக்டர் அம்பேத்கரின் 133-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது



திருவள்ளூர், ஏப். 15 -

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சி மற்றும் ஆரணி ஆலமரம் அருகே சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கரின் 133-வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படம் மற்றும் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

ஆரணி பேரூராட்சியில் அம்பேத்கரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதன் பின்னர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். இந்நிகழ்ச்சிக்கு, பேரூராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி தலைமை தாங்கினார். துணைத் தலைவர் வக்கீல் சுகுமார் முன்னிலை வகித்தார்.

இதில் நியமனக் குழு உறுப்பினரும், 10-வது வார்டு உறுப்பினருமான டி.கண்ணதாசன், 3-வது வார்டு உறுப்பினர் எஸ். பிரபாவதி சேஷாத்ரி, ஆரணி பேரூர் திமுக துணைச் செயலாளர் வக்கீல் டி.கோபிநாத் மற்றும் பேரூராட்சி மன்ற ஊழியர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆரணி ஆலமரம் அருகே உள்ள அம்பேத்கரின் திருவுருவ சிலைக்கு ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து மாலை அணிவித்து மரியாதை செய்தார். இந்நிகழ்ச்சியில், பேரூர் அவைத்தலைவர் வக்கீல் ஜி.ரமேஷ், பொருளாளர் கு.கரிகாலன், எல்லாபுரம் தெற்கு ஒன்றிய அவைத் தலைவர் டி.கே.முனிவேல், ஆரணி பேரூர் திமுக நிர்வாகிகள் நீலகண்டன், விஜயகுமார், ஜெயக்குமார், ரகுமான்கான், திருமலா சேகர், வக்கீல் ஜெகன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர், காங்கிரஸ் கட்சி சார்பில் வக்கீல் சுகுமார் அம்பேத்கரின் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதை தொடர்ந்து புரட்சி பாரதம் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு அம்பேத்கரின் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதேபோல் எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் பஸ் நிலையத்தில் உள்ள அம்பேத்கரின் திருவுருவ சிலைக்கு எல்லாபுரம் வடக்கு வட்டார காங்கிரஸ் கட்சி தலைவர் மூர்த்தி தலைமையில் திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கே.ஜெயக்குமார், பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், திருவள்ளூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சிதம்பரம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதில் வட்டாரத் தலைவர்கள் வெங்கல் சிவசங்கர், ஏ.மதன்மோகன், ராமன், மாவட்ட துணை தலைவர்கள் லோகநாதன், ஏ.சத்திய நாராயணன், மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி ஜோதி சுதாகர், திமுக வழக்கறிஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் வக்கீல் ஏ.சீனிவாசன் மற்றும் பல்வேறு கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இதன் பின்னர் பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# புதுக்கோட்டை ஸ்ரீபுவனேஸ்வரி அம்மனுக்கு வருடப்பிறப்பையொட்டி சிறப்பு அபிஷேக அலங்காரம்



புதுக்கோட்டை, ஏப்.15-

புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி அதிர்ஷ்டானத்தில் தமிழ் வருடப்பிறப்பை முன்னிட்டு அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் சிறப்பு அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது

தமிழ் வருடப்பிறப்பு விழாவை முன்னிட்டு அதிகாலை முதல் கோ பூஜை திருப்பள்ளிஎழுச்சி மற்றும் சிறப்பு ஹோமம் ,நடந்தது பின்னர் ஸ்ரீபுவனேஸ்வரி அம்மனுக்கு பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் கலசாபிஷேகம் சிறப்பு அலங்காரம் மற்றும் தீபாராதனை பூஜ்யஸ்ரீ ப்ரணவானந்த சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

பூஜ்யஸ்ரீ ப்ரணவானந்த சுவாமிகள் பக்தர்களுக்கு தமிழ் வருடப்பிறப்பு வாழ்த்துக்கள் கூறி அருளாசிவழங்கினார், தொடர்ந்து ஸ்ரீ சகஸ்ரநாம பாராயணம் வாசிக்கப்பட்டது மேலும் அதிர்ஷ்டானத்தில் அருள்பாலிக்கும் அஷ்ட மஹாலெட்சுமிக்கும் பஞ்சமுகவிநாயகர் பஞ்சமுக ஆஞ்சினீயர் திருமுருகன் ,உள்ளிட்ட சாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம் சிறப்பு அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது, இதில் மருத்துவர் ராஜமாணிக்கம், மருத்துவர் பத்மனி இண்டேன் கேஸ் ஸ்ரீதர், புவனேஸ்வரி தங்கமாளிகை நடராஜன், கல்வியாளர் ரொட்டேரியன் முத்துராமன், பானுமதி கண்ணன், சமூக ஆர்வலர்கள் பக்தர்கள் வந்திருந்து வழிபட்டனர் அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# தமிழ் புத்தாண்டை முன்னிட்டு கல்லங்குறிச்சி கலியபெருமாள் கோவிலில் பஞ்சாங்கம் வாசிப்பு



அரியலூர், ஏப்,15-

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு கல்லங்குறிச்சி கலியபெருமாள் கோவிலில், பஞ்சாங்கம் வாசிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ் புத்தாண்டு நாளான சோபகிருது வருடம், சித்திரை முதல் நாளான நேற்றைய தினம், அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கோயில்களிலும், பொதுமக்கள் பங்கேற்புடன் சிறப்பு வழிபாடு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அரியலூர் குறிஞ்சான் குளம் தெருவில் உள்ள பெரியநாயகி அம்மன் கோயிலுக்கு, அரியலூர் செட்டி ஏரிக்கரையில் இருந்து ஏராளமான பொதுமக்கள் அலகு காவடிகளுடன், பால்குடம் எடுத்துச் சென்று சிறப்பு அபிஷேகம் நடத்தினர், அதைத்தொடர்ந்து மாலையில் அம்மன் திருவீதி உலா நிகழ்ச்சி நடைபெற்றது.

அரியலூர் அருகே உள்ள பிரசித்தி பெற்ற, கலியபெருமாள் கோயில் என்று பக்தர்களால் அழைக்கப்படும் கலியுக வரதராஜ பெருமாள் கோவிலில், தமிழ் புத்தாண்டு நாளான நேற்றைய தினம், வழக்கம்போல பஞ்சாங்கம் வாசிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கோயிலில் ஆதீன பரம்பரை தர்மகர்த்தாக்கள் கமலா ராமச்சந்திரன், ராமதாஸ், வெங்கடாஜலபதி, மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள், பட்டாச்சாரியார்கள், திருக்கோவில் பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, அரியலூர் தமிழ் பண்பாட்டு பேரமைப்பு தலைவர் சீனி பாலகிருஷ்ணன், கோவிலின் ஆதீன பரம்பரை தர்மகர்த்தா வெங்கடாஜலபதி உள்ளிட்டோருக்கு, சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

# புதுக்கோட்டை மாவட்டம் போசம்பட்டி மற்றும் அம்பாள்புரத்தில் ரூ.12.50 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள்

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார்



புதுக்கோட்டை, ஏப்.15-

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், வாளரமாணிக்கம் ஊராட்சி, போசம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் நெடுங்குடி ஊராட்சி, அம்பாள்புரத்தில், புதிய கலையரங்கங்களை, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி நேற்று (14.04.2023) திறந்து வைத்தார்.

இந்நிகழ்வுகள் மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி தலைமையில் நடைபெற்றது, பின்னர் சட்ட அமைச்சர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார், அந்த வகையில் கிராமப்புறங்களின் வளர்ச்சியினை மேம்படுத்தும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி இன்றையதினம் அரிமளம் ஊராட்சி ஒன்றியம், போசம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6 இலட்சம் செலவில் புதிய கலையரங்கத்தினையும் மற்றும் அம்பாள்புரத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6.50 இலட்சம் செலவில் புதிய கலையரங்கத்தினையும் என மொத்தம் ரூ.12.50 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கலையரங்கங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சாலைவசதி, மின்வசதி, குடிநீர்வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்டவைகளை நிறைவேற்றிட முக்கியத்துவம் அளித்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் மாணவ, மாணவிகளின் கல்வித்திறனை வளர்த்துக்கொள்ளவும், இயல், இசை, நாடகம் முத்தமிழில் முத்திரை பதிக்க மாணவ, மாணவிகள் இக்கலையரங்கத்தினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும், எனவே இப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் அனைவரும் இதனை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் (பொ) எம். மாரி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் கலைவாணி சுப்பிரமணியன், ஒன்றியக்குழு உறுப்பினர் ராஜேஸ்வரி அடைக்கலம், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் பொன்.இராமலிங்கம், இளையராஜா, ஊராட்சிமன்றத் தலைவர் வெள்ளைச்சாமி, தலைமையாசிரியை சுகந்தி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு அரிமளம் கோயில்களில் சிறப்பு வழிபாடு





அரிமளம்,ஏப்.15-

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளத்தில் சித்திரை முதல் நாள் தமிழ் வருட பிறப்பை முன்னிட்டு ஸ்ரீ ஜெயவிளங்கி அம்மன் கோயிலில் காலை எட்டு மணியளவில் அபிஷேக ஆராதனையும் 11 மணியளவில் அரிமளம் சாஸ்தா காங்கிரட் நிருவணத்தார் முருகேசன் ஏற்பாட்டில் அருசுவை அன்னதானம் மிக சிறப்பாக நடைபெற்றது.

இதில் இரண்டாயி ரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர், அரிமளம் வர்த்தக சங்கம் சார்பில் மார்கெட் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவிலில் அம்மனுக்கு அபிஷேக ஆராதனை இரவு எட்டு மணிக்கு அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் அம்மன் திருவீதி உலா நடைபெற்றது.



▶ தமிழ்நாடு பிராமண சமாஜம் புதுக்கோட்டை மாவட்டத்தின் சார்பில் சோபகிருது வருஷ பஞ்சாங்கம் வெளியீட்டு விழா கீழ 5ம் வீதியில் உள்ள மாவட்டத் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. சோபகிருத வருஷ பஞ்சாங்கத்தை இண்டேன் ஸ்ரீதர் வெளியிட மலையப்பன் பெற்றுக்கொண்டார். நிகழ்வில் மாவட்டத் தலைவர் தியாகராஜன், தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் பிரசாத் வரவேற்புரையாற்றினார். இளைஞர் அணி செயலாளர் ஸ்ரீதரன் நன்றி கூறினார். மேலும் இந்நிகழ்வில் குரு ஸ்ரீராம், மகளிர் அணி செயலாளர் ஸ்ரீவித்யா உள்ளிட்ட மூத்த நிர்வாகிகள் மற்றும் புதிய நிர்வாகிகள் உட்பட 50க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்துகொண்டனர்.

# புதுக்கோட்டையில் டீம் மருத்துவமனை சார்பாக நோய் கண்டறியும் மற்றும் காய்ச்சல் விழிப்புணர்வு மருத்துவ முகாம்



புதுக்கோட்டை, ஏப்.15-

முதலமைச்சரின் மருத்துவ காப்பீடுதிட்டத்தின் கீழ் நோய் கண்டறியும் மற்றும் காய்ச்சல் சிறப்பு மருத்துவ முகாம் தமிழக முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி, டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் கே.எச். சலீம் வழிகாட்டுதலின்படி டீம் மருத்துவமனை சார்பாக புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகா, வெள்ளனூர் ஊராட்சி, காவேரி நகர் கிராமத்தில் நேற்று நடைபெற்றது.

முகாமிற்கு காவேரி நகர் பஞ்சாயத்து தலைவர் பார்வதி வேலுச்சாமி தலைமை தாங்கினார், துணைதலைவர் முருகேசன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர், தற்போது நிலவி வரும் நோய்த் தொற்று பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை பற்றியும் டெங்கு, பன்றிக்காய்ச்சல், இன்ஃபுளுயன்சா போன்ற வைரஸ் காய்ச்சலால் ஏற்படும் சோர்வு, தலைவலி, அதிக உடல் வெப்பம், தொண்டைவலி, உடல்வலி, வாந்தி, வயிறுவலி, எலும்புவலி, மயக்கம் ஆகிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைகளை அனுகி பரிசோதனை செய்துகொண்டு முறையாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டும் என்றும் முகாமில் அறிவுறுத்தப்பட்டது.

இக்காலக்கட்டத்தில் குடிநீரை காய்ச்சி பருக வேண்டும், கை, கால்களை சுத்தமாக அடிக்கடி சோப்பு போட்டு கழுவ வேண்டும், சத்துநிறைந்த பழங்கள், காய்கறிகளை உண்ண வேண்டும், அதிகஎண்ணெயில் வறுத்து, பொரித்த உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும், மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்களில் முககவசம் அணியவும், சிறிதளவு சமூக இடைவெளியுடன் இருந்தால் நோய்த் தொற்றிலிருந்து நம்மை பாதுகாக்கலாம் என்று மருத்துவர் விளக்கி கூறினார். டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இருக்கை மருத்துவர் முகமது முஸ்தப்பா அனைவருக்கும் பரிசோதனையும் ஆலோசனையும் வழங்கினார். முகாமில் இரத்த அழுத்தம், உயரம், எடை, வெப்பத்தின் அளவு, இரத்த சர்க்கரை அளவு போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டது.

இம்முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். முகாம் ஏற்பாடுகளை டீம் மருத்துவமனையின் பொது மேலாளர் திரு.ஜோசப், செவிலியர் கண்காணிப்பாளர் யோகேஸ்வரி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மதுபாலன் ஆகியோர் செய்திருந்தனர், முடிவில் திட்ட ஒருங்கினைப்பாளர் பாண்டியராஜ் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# ஆலங்குடி அருகே சித்திரை முதல்நாள் நல்ஏர் பூட்டிய விவசாயிகள்



ஆலங்குடி,ஏப்.15-

தமிழர் புத்தாண்டான சித்திரை முதல் நாள் நல்லேர் பூட்டி, விளைநிலத்தை உழுது விதை விதைத்து வழிபட்டால் அந்த ஆண்டு மழை பெய்து, விவசாயம் செழிக்கும் என்பது விவசாயிகளின் நெடுங்கால நம்பிக்கை.

இந்நிலையில், நிகழாண்டு சித்திரை முதல் நாளான நேற்று ஆலங்குடி கறம்பக்குடி பகுதிகளான எஸ்.குளவாய்ப்பட்டி, கொத்தமங்கலம், சேந்தன்குடி, வடகாடு, மாங்காடு, அணவயல், செரியலூர், மேற்பனைக்காடு, மாங்கோட்டை, வாராப்பூர், மழையூர் உள்ளிட்ட பகுதியில் விவசாயிகள், காலையில், விளைநிலத்தில் படையலுடன், காளைகளுக்கு சிறப்பு வழிபாடு நடத்தி நல்லேர் பூட்டி விதைகளை விதைக்கும் பணியைத் தொடங்கினர்.

ஒன்று கூடி விளைநிலத்தில் படையலுடன் வழிபாடு நடத்தினர். தொடரந்து, இரண்டு காளை மாடுகளில் ஏர்பூட்டி உழவைத்தொடங்கினர், பல இடங்களில் காளைகள் இல்லாததால், டிராக்டரை கொண்டு உழுது சித்திரை முதல் நாள் வழிபாட்டில் விவசாயிகள் ஈடுபட்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் அருகே எஸ் குளாவய்ப்பட்டியில் சித்திரை திருநாளையொட்டி நல்லேர் பூட்டுதல் விழா நடைபெற்றது, இவ்விழா ஆண்டுதோறும் சித்திரை மாதம் முதல் நாள் தமிழ் வருடபிறப்பு அன்று விவசாயம் செழிப்பதற்காக விவசாயிகள் ஏர் கலப்பை உழவு மாடுகளை கொண்டு விவசாயிகள் அனைவரும் ஒரு இடத்தில் ஒன்று கூடி வயலில் பூசை செய்து சாமி கும்பிட்டு நல்லேர் கட்டி உழவு செய்து விவசாயத்திற்காக முதல் வேலையை துவங்கினர் இதில் குளவாய்பட்டியை சுற்றியுள்ள கிராமத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.





▶ புதுக்கோட்டையில் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன், மாவட்ட செயலாளர் செல்லபாண்டியன், எம்.பி. அப்துல்லா, எம்எல்ஏ முத்துராஜா உள்ளிட்டோர் அம்பேத்கார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



▶ புதுக்கோட்டையில் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு பாஜக மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்த போது எடுத்த படம்.



▶ புதுக்கோட்டை மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் விழாவில் தெற்கு மாவட்ட தலைவர் ராம. சுப்புராம் தலைமையில் ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி தங்கமாளிகையில் 43-ம் ஆண்டு விழா



புதுக்கோட்டை, ஏப்.15-

புதுக்கோட்டை ஸ்ரீ புவனேஸ்வரி தங்கமாளிகையில் 43-ம் ஆண்டு துவக்க விழா மற்றும் அட்சயதிருதியை முன்பதிவு நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் திருச்சி சீனிவாசன் மற்றும் உஷா சீனிவாசன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர், அதை தொடர்ந்து அட்சயதிருதியை முன்பதிவை புதுக்கோட்டை சாரதா மோட்டார்ஸ் உரிமையாளார் விஸ்வநாதன், சாரதா விஸ்வநாதன் மற்றும் டாக்டர் ஜானகிரவிக்குமார் ஆகியோர் துவக்கி வைத்தனர். விழாவிற்கு வந்தவர்களை ஸ்ரீ புவனேஸ்வரி தங்கமாளிகையின் உரிமையாளர்கள் சோம. நடராஜன், சோம. யோகநாதன், விஜய்ஸ்ரீநாத் ஆகியோர் வரவேற்றனர்.



▶ சட்டமேதை அம்பேத்காரின் 133 வது பிறந்த தினம் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்பை முன்னிட்டு புதுக்கோட்டை சிபிஐ மாவட்ட குழு சார்பில் மாவட்ட செயலாளர் செங்கோடன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

## 2011ம் ஆண்டு ஷெல் கம்பெனிகளிடம்

# ரூ.200 கோடி லஞ்சம் பெற்றார் மு.க.ஸ்டாலின் பாஜக தலைவர் அண்ணாமலை குற்றச்சாட்டு



சென்னை , ஏப்.15-

கடந்த 2006-11ல் திமுக ஆட்சியில் இருந்தபோது சென்னையில் மெட்ரோ ரயில் முதல் கட்ட திட்டப்பணிக்கான டெண்டர் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்துக்கு கிடைக்க மு.க.ஸ்டாலின் சாதகமாக செயல்பட்டு அதற்காக ரூ. 200 கோடி லஞ்சம் வாங்கியதாக அவர் மீது அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக சிபிஐயிடம் புகார் அளிக்கப் போவதாக அவர் அறிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் திமுகவின் சொத்து மற்றும் ஊழல் பட்டியலை பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டார். இது தொடர்பாக பேசிய அவர், சென்னை மெட்ரோ ரயில் முதல் திட்டத்தின்போது ஷெல் கம்பெனிகளிடம் இருந்து மு.க.ஸ்டாலின் ரூ.200 கோடி லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,"2006 இல் இருந்து 2011ம் ஆண்டு வரை திமுக ஆட்சியில் இருந்தபோது சென்னையில் முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் அமைக்க அனுமதி கிடைக்கிறது. இந்த திட்டத்திற்கு ஜிகா நிறுவனம் 59 சதவீதமும், மத்திய அரசு 15 சதவீதமும், மாநில அரசு 21 சதவீதமும் நிதி உதவி அளித்தன. மொத்த திட்ட செலவு ரூ. 14 ஆயிரம் கோடி. தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக அவசர அவசரமாக இந்த டெண்டரைக் கொண்டு வருகிறார்கள். 5.5.2010ம் ஆண்டு மத்திய அரசு எக்சிளம் பாலிசியை கொண்டு வருகிறது. வெளிநாட்டு நிறுவனங்கள் ஒரு டெண்டரில் கலந்து கொண்டால் அதை எப்படி மதிப்பீடு செய்ய வேண்டும் என்பது தொடர்பாக எக்சிளம் பாலிசி கொண்டு வரப்படுகிறது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் 14.5.2010 ம் தேதி, ஆதாவது ஒன்பதே நாளில் டெண்டர் வெளியிடுகிறது. இதில் 3 நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன. டெண்டர் முடிய சில நாட்கள் இருக்கும் போது ஒரு திருத்தம் கொண்டு வருகிறார்கள். டெண்டரில் சுங்க வரியை சேர்க்கப் போகிறோம் என்று திருத்தம் கொண்டு வருகிறார்கள். அதற்குள் நிதி தொடர்பான கோரிக்கைகள் (financial bid) சமர்ப்பிக்கப்பட்டு விட்டன.

ஆனால், எந்த காரணத்தைக் கொண்டும் சுங்க வரியை சேர்க்க கூடாது என்று எக்சிளம் பாலிசி கூறுகிறது. சுங்க வரி சேர்ப்பதற்கு முன்பு ரூ.1417 கோடி கோரி இருந்த சீனாவைச் சேர்ந்த நிறுவனம் டெண்டருக்கு தகுதி பெற்று இருந்தது. இரண்டாது இடத்தில் ரூ.1434 கோடியுடன் ஆல்ஸ்டாம் நிறுவனம் உள்ளது. சுங்க வரி சேர்த்த உடன் இரண்டாவது இருந்த ஆல்ஸ்டாம் நிறுவனம் முதல் இடத்திற்கு வருகிறது. டெண்டர் முடிந்த பிறகு சுங்க வரியை திருப்பிக் கொடுத்து விட்டார்கள். ஆனால் டெண்டர் ஆல்ஸ்டாம் நிறுவனத்திற்கு அளிக்கப்படுகிறது.

உலக முழுவதும் பொருட்களை விற்பனை ஆல்ஸ்டாம் நிறுவனம் லஞ்சம் கொடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஆல்ஸ்டாம் நிறுவனத்திற்கு அமெரிக்காவில் 772 மில்லியன் டாலர் அபராதம் விதிக்கப்பட்டது. இதில் எங்களின் நேரடி குற்றச்சாட்டு முதல்வருக்கு 200 கோடி ரூபாய் ஆல்ஸ்டாம் நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ளது. இது 2 நாடுகளைச் சேர்ந்த ஷெல் நிறுவனங்கள் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு தேர்தல் நிதிக்காக ரூ.200 கோடி மு.க.ஸ்டாலினுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த துறை அப்போது மு.க.ஸ்டாலினிடம் இருந்தது. இது தொடர்பாக நானே சிபிஐக்கு புகார் அளிக்கப் போகிறேன். மத்திய அரசின் 15 சதவீத நிதி உள்ளதால் இதை விசாரிக்க சிபிஐக்கு உரிமை உள்ளது." இவ்வாறு அவர் கூறினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# வேலூரைச் சேர்ந்த ஐஸ்வர்யாவுக்கு 2023–ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருது முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்



சென்னை , ஏப்.15-

திருநங்கையர்களின் முன்னேற்றத்திற்காக கடந்த 22 ஆண்டுகளாக தனது கிராமியம் மற்றும் நாடக கலையின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி சேவை புரிந்து வரும் திருநங்கை ஐஸ்வர்யாவுக்கு 2023-ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருதினை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தியில், ''தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் திருநங்கைகளின் நலனிற்காக சிறப்பான முறையில் சேவை புரிந்ததற்காக 2023-ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருதினை வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை பி. ஐஸ்வர்யாவுக்கு வழங்கினார்.

திருநங்கைகளின் நலனிற்காக சிறப்பான முறையில் சேவைபுரிந்து, அவர்களுக்குள் முன்மாதிரியாக திகழும் திருநங்கை ஒருவர், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவால் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் திருநங்கைகள் தினமான ஏப்ரல் 15-ஆம் நாளில் அவர்களை சிறப்பிக்கும் பொருட்டு சிறந்த திருநங்கை விருது கடந்த 2021-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கு தேர்ந்தெடுக்கப்படும் திருநங்கைக்கு 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

அந்த வகையில், திருநங்கைகள் சமூகத்திற்கு முன்மாதிரியாக திகழ்வதோடு, திருநங்கையர்களின் முன்னேற்றத்திற்காக கடந்த 22 ஆண்டுகளாக தனது கிராமியம் மற்றும் நாடக கலையின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி சேவை புரிந்து வரும் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை பி. ஐஸ்வர்யாவின் சிறந்த சேவையை பாராட்டி, தமிழ்நாடு அரசின் 2023-ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருது, 1லட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழை அவருக்கு தமிழக முதல்வர் வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன், தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இயக்குநர் த.ரத்னா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலுப்பூரில் உலக ஆட்டிசம் நாள் விழிப்புணர்வு விழா



இலுப்பூர் , ஏப்.15-

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் வட்டார வள மையத்திற்குட்பட்ட இலுப்பூரில் இயங்கி வரும் பள்ளி ஆயத்த பயிற்சி மையத்தில் உலக ஆட்டிசம் விழிப்புணர்வு விழா இனிதே நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கமாக இயன்முறை மருத்துவர் கோவிந்தசாமி வரவேற்றார். ஆட்டிசம் நோய் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக வட்டார வளமைய மேற்பார்வையாளர் ரோஸ்மேரி சகாயராணி பேசுகையில்;- ஆட்டிசம் என்னப்படும் இது ஒரு நோய் அல்ல குறைபாடே ஆகும். நிரந்தரமாக குணப்படுத்த முடியாவிட்டாலும் இவ்வகையான குழந்தைகளை பயிற்சியின் மூலம் நல்ல முன்னேற்றம் காணச் செய்து சக மாணவர்களோடு போட்டியிடும் அளவிற்கு முன்னேறச் செய்யலாம்.

ஆட்டிசம் குழந்தைகள் எங்களை ஆட்டி படைக்கின்றன என்று கூறும் பெற்றோர்களாகிய நீங்கள் பொறுமையோடும் நிதானத்தோடும் பயிற்சியை தொடர்ந்து குழந்தைகள் பெற்று வரும்படி அவர்களை ஊக்குவித்தால் நிச்சயம் ஆச்சரியம் மட்டும் வகையில் குழந்தைகளின் சூழ்நிலைகளை மாற்றி அமைக்க முடியும். ஒன்றிரண்டு வயதுகளில் ஆட்டிசம் குழந்தைகளை நாம் தனியாக பகுத்து அறிய முடியும். இவ்வகையான குழந்தைகள் முகத்தை நேருக்குநேர் பார்த்துபேச மாட்டார்கள் செய்கின்ற ஒரு செயலையே அடிக்கடி செய்து கொண்டிருப்பார்கள்.

பூமி சுழல்வதைப் போல சுற்றி சுற்றி வருவார்கள். சக மாணவர்களோடும் சமூகத்தோடும் உள்ள இவர்களுக்கான தொடர்பில் மாறுபாடு காணப்படும். இவ்வகையான குழந்தைகளின் மேல் நமது சிறப்பு பயிற்சிநர்கள் சிறப்பு கவனம் செலுத்தி நல்ல முன்னேற்றம் அடையச் செய்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சுக்குரிய செய்தியாகும். ஆட்டிசம் என்னும் குறைபாடு நிசம்தான். உங்களின் அன்பும் ஆதரவும் இருந்தால் எதிர்காலம் அவர்களின் கை வசம்தான் என்று பேசினார்.

நிகழ்வில் ஆசிரியர் பயிற்றுனர் வைரமுத்து, சிறப்பு பயிற்றுநர்கள் பாஸ்கர சேதுபதி, சந்திரா, கலைச்செல்வி போன்றோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர். விழிப்புணர்வு சார்ந்த திரைப்படம் காண்பிக்கப்பட்டது. மாற்றுத்திறன் குழந்தைகளின் பெற்றோர்கள் குழந்தைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மைய ஆசிரியர் ராஜாமணி நன்றி கூறினார்.

# தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு கும்பகோணம் சுவாமிமலை சுவாமிநாதர் கோயிலில் படிபூஜை



கும்பகோணம் , ஏப். 15 –

கும்பகோணம் வட்டம், சுவாமி மலையிலுள்ள சுவாமிநாத சுவாமி கோயிலில், தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு 60 தமிழ் ஆண்டு பெயர்களுடன் கூடிய படிகளுக்குத் சிறப்பு பூஜை நடைபெற்றது.

முருகனின் ஆறுபடை வீடுகளில் நான்காவது படைவீடான சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோயிலில், தமிழ் வருடத்தின் பெயர்களான பிரபவ முதல் அட்சய வரையிலான 60 தமிழ் ஆண்டுகளின் பெயர்கள் 60 படிக்கட்டுக்களாக அமைந்துள்ளன. இக்கோயிலில், ஆண்டுதோறும் தமிழ்ப் புத்தாண்டு தினத் தன்று, 60 படிகளுக்கு, பூஜை நடைபெறுவது வழக்கம்.

அதன் படி, நிகழாண்டு தமிழ்ப் புத்தாண்டு தினமான நேற்று படிகளுக்குச் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதில், சோபகிருது ஆண்டிற்குரிய படிக்குச் சிறப்பு பூஜைகளும் தொடர்ந்து பன்னிரு திருமுறைகள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, நிகழாண்டில் மழைவளம் வேண்டியும், வறட்சி நீங்கி தானிய விளைச்சல் பெருகவும் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதனை முன்னிட்டு, நேற்று அதிகாலை மூலவர் சுவாமிநாத சுவாமி நடை திறக்கப்பட்டு, சிறப்பு அபிஷேகம், தங்கக் கவசம், வைரவேல் அலங்காரம் நடைபெற்றது. விழாவுக்கான ஏற்பாடுகளைக் கோயில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

# "தினகரனையும் என்னையும் சேர்த்து வையுங்கள்"

## ரகசியத்தை உடைத்த ஓ.பன்னீர்செல்வம்



திருச்சி , ஏப். 15 –

திருச்சியில் வரும் 24ம் தேதி ஓபிஎஸ் தலைமையில் நடைபெறவுள்ள முப்பெரும் விழா மாநாடு குறித்த ஆலோசனைக் கூட்டம் பெரியகுளம் அருகே கைலாசபட்டியில் நடைபெற்றது. சையது கான் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், தேனி மாவட்ட ஓபிஎஸ் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய ஓபிஎஸ், "திருச்சியில் நடக்கும் மாநாட்டிற்கு கட்சி நிர்வாகிகள் அவரவர் பகுதியில் இருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகனத்தில் முழுமையாக ஆட்களை அழைத்து வர வேண்டும்" என்றார். தொடர்ந்து பேசிய அவர், அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதே ஜெயலலிதாவின் கனவு என்றும், அதையே தாமும் சசிகலாவும் தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் கூறினார்.

மேலும் தமிழகத்திற்கு முழுமையாக ஜல்லிக்கட்டு பெற்று தந்தவர் மோடி தான். உண்மையான ஜல்லிக்கட்டு நாயகன் என்றால் அது பாரத பிரதமர் மோடி தான், நானில்லை என்றார். தேனி மாவட்டத்தில் கட்சி நிதி திரட்டுவதற்காக பல கட்சிகள் தொழிலதிபர்களிடம் கையேந்தி நிற்கும் நிலையில், முன்னாள் பாராளுமன்றஉறுப்பினர் டிடிவி தினகரன் தேனி மாவட்டத்தை நிர்வகிக்கும் போது, அதிமுகவிற்காக யாரிடமும் நிதியுதவி கேட்டு கையேந்தி நிற்கவில்லை என கூறினார். அவர் எப்படி தேனி மாவட்ட அதிமுக கட்சியை தன்னிடம் விட்டுச் சென்றாரோ அதே போல் நானும் தற்போது வரை எந்த தொழிலதிபரிடம் கட்சி நிதிக்காக கையேந்தவில்லை என தெரிவித்தார்.

தேனி மாவட்ட அதிமுக செயலாளர் சையது கான் அடிக்கடி சென்னை செல்லும் போதெல்லாம் டிடிவி தினகரனை சந்தித்து பேசுவார். அதை நான் இதுவரையிலும் தடுக்கவில்லை. அதற்கு, நான் எங்கு சென்றாலும் எப்பொழுதும் உங்களுடன் தான் இருப்பேன் என சையது கான் கூறுவார். அவரிடம் "எங்கள் இருவரையும் சமாதானப்படுத்தி ஒன்றிணைத்து விடுங்கள்" என தான் கூறியதாக தனது ஆதரவாளர்களிடம் ஓபிஎஸ் தெரிவித்தார்.

# பேரனின் திருமணத்தில் நடனமாடி மக்களை கவர்ந்த 96 வயது முதியவர்



நேபாளம், ஏப். 15 –

நேபாளத்தில் தனது பேரனின் திருமணத்தில் 96 வயது தாத்தா உற்சாகமாக நடனமாடும் வீடியோ இன்ஸ்டாகிராமில் வைரலாகி வருகிறது. திருமண நடன வீடியோக்கள் பார்க்க மிகவும் மகிழ்ச்சியான விஷயங்களில் ஒன்றாகும்.

அந்த வகையில் நேபாளத்தில் தனது பேரனின் திருமணத்தில் தாத்தா நடனமாடுவதைப் படம்பிடித்துள்ள வீடியோ மக்களின் இதயங்களை வெகுவாக கவர்ந்துள்ளது. விருந்தாளிகள் இசைக்குழுவின் இசையில் முதியவர் நடனமாடுவதை 76,600 பார்வையாளர்கள் பார்த்து ரசித்து தங்களது லைக்குகளை தெரிவித்துள்ளனர்.

# தாம்பரம் நாகல்கேணி பகுதியில் பாபாசாகிப் அம்பேத்கர் 133 வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



தாம்பரம், ஏப். 15 –

நாகல்கேணி பகுதியில் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் 133 வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது உருவச் சிலைக்கு மாலை அணிவித்து அன்னதானம் மற்றும் இனிப்பு வழங்கி நாகல்கேணி ஊர் பொதுமக்கள் கொண்டாடினர்.

இந்நிகழ்ச்சிக்கு செயலாளர் சிரஞ்சீவி, பொருளாளர் ராஜேஷ், துணைச் செயலாளர் குபேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேம்புலி, செல்வராஜ், மாரிமுத்து, கோவிந்தசாமி, முனுசாமி ஆகியோர் தலைமை தாங்கினர். கார்த்திகேயன், சுகு, ராஜன், ரஞ்சித், சதாசிவம், ராஜேந்திரன், கணபதி, ரவி, சீனிவாசன், லட்சுமணன், சரவணன், அசோக் குமார், மனிஷ் குமார். வினோத் குமார் அனைவரையும் வரவேற்றனர். விழாவில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# அதிமுகவினரின் ஊழல் பட்டியலையும் அண்ணாமலை வெளியிட வேண்டும்... சீமான் பேட்டி



சென்னை , ஏப். 15 –

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மதுரைக்கு வந்தார். பெருங்குடி அருகே உள்ள அம்பேத்கர் சிலைக்கு அருகில் வைக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த சீமான், "திமுகவின் ஊழல் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். அண்ணாமலை திமுக அமைச்சர்கள் ஊழல் பட்டியலை வெளியிட்டதால் அதிமுகவில் இருப்பவர்கள் எல்லாம் பரிசுத்தமானவர்கள் அல்ல? யார் ஊழல் செய்தாலும் அவர்களுடைய ஊழல் பட்டியலை அவர் வெளியிடுவாரா?

ஊழல் பட்டியலை வெளியிடும் அண்ணாமலை, ஊழல் செய்தவர்களோடு கூட்டணி வைக்க மாட்டேன் என சொல்வாரா?. நேர்மையான அரசியல்வாதியாக இருந்தால் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீதும், ஆட்சி செய்தவர்கள் மீதும் உள்ள ஊழல் பட்டியலை அண்ணாமலை வெளியிட வேண்டும்" என்றார்.

சட்டமன்றத்தில் ஐபிஎல் பார்க்க டிக்கெட் வழங்க வேண்டும் என பேசியது குறித்து கேள்விக்கு, "நாட்டில் எவ்வளவோ பிரச்னை இருக்கிறது. அதை விடுத்து விட்டு ஐபிஎல் பிரச்னையை பேசுகிறார்கள். ஐபிஎல் போட்டி என்பது 5 கோடி, 10 கோடி என ஏலத்தில் எடுக்கப்பட்ட வீரர்கள் விளையாடி வருகிறார்கள். அதைப்பற்றி பேச வேண்டிய அவசியமே இல்லை? அது ஒரு சூதாட்டம்" என்றார்.

மேலும், "திருமங்கலம் அருகே பணித்தள பொறுப்பாளர் பேருந்தில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். இந்த விவகாரத்தில் உண்மையை அறிந்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தால்தான் இதுபோன்ற குற்றங்கள் நிகழாமல் தடுக்க முடியும். பல்லை உடைத்த பல்பீர் சிங் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோல் தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்திலும் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது" என கேள்வி எழுப்பினார். தொடர்ந்து பேசிய அவர் வரும் மக்களவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்தே போட்டியிடும் என தெரிவித்தார்.


# ஐதராபாத்தில் 125 அடி உயர அம்பேத்கர் சிலை– சந்திரசேகர் ராவ் திறந்து வைத்தார்

ஐதராபாத் , ஏப். 15 –

ஐதராபாத் ஹூசைன் சாகர் பகுதியில் நாடாளுமன்ற கட்டிட வடிவில் அம்பேத்கருக்கு 125 அடி உயரத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி விரைவில் சுற்றுலா தலமாக மாற்றப்பட உள்ளது. ரூ.148.50 கோடியில் சுமார் 11.80 ஏக்கர் நிலத்தில் என்டிஆர் கார்டன் பகுதியில் இந்த சிலை அமைக்கப்பட்டுள்ளது.

கட்டுமானப் பணிகளுக்கு எஸ்சி நலத்துறை நிதி வழங்கிய நிலையில், கட்டுமானப் பொறுப்புசாலைகள் மற்றும் கட்டிடங்கள் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஹைதராபாத்தில் உள்ள இந்த 125 அடி உயர அம்பேத்கர் சிலையை முதல்வர் கே சந்திரசேகர் ராவ் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அம்பேத்கரின் பேரன் பிரகாஷ் அம்பேத்கர், தெலுங்கானா அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

வரலாறு நாளிதழ்
நிறுவனத்தில் பணிபுரிய
ஆட்கள் தேவை
காலிப் பணிஇடங்கள் 2
PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN
தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள்
சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.
நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்
தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட
செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்
மேலும் தொடர்புக்கு :
TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534



# அதிகார பசி கொண்டவர்கள் நாட்டிற்கு அதிக தீங்கிழைத்துவிட்டார்கள்

# திமுக சொத்து பட்டியல்: அரசியலுக்காக அண்ணாமலை குற்றம்சாட்டுகிறார்





# 2011ம் ஆண்டு ஷெல் கம்பெனிகளிடம் ரூ.200 கோடி லஞ்சம் பெற்றார் ஸ்டாலின்


சென்னை / புதுக்கோட்டை | 15.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

15.04.2023 சனி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கா. கோவிந்தன் , தமிழக அரசியல்வாதி, எழுத்தாளர் (பி.1915) (இ.1991)



கிருஷ்ணா வைகுந்தவாசன் , இலங்கைத் தமிழ் செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1920) (இ.2005)



மனோஜ் பிரபாகர் , இந்தியத் துடுப்பாளர் (பி.1963)



## இன்றைய நினைவு நாள்

ஆபிரகாம் லிங்கன் , அமெரிக்காவின் 16வது அரசுத்தலைவர் (பி.1809) (இ.1865)



குன்றக்குடி அடிகள் , தமிழக சமய, இலக்கியவாதி (பி.1925) (இ.1995)



எஸ். புண்ணியமூர்த்தி , இலங்கை வானொலி அறிவிப்பாளர் (இ.2006)



நாவண்ணன் , ஈழத்துக் கவிஞர், ஓவியர், சிற்பி (இ.2006)

